## 4. விட்டுக் கொடுக்க வேண்டும்.

அழகான ஒரு வாய்க்கால்.
அதன் இரண்டு கரைகளிலும் பச்சையான வயல்கள் இருந்தன.
வாய்க்காலைக் கடக்க ஒரு மரப்பாலம் இருந்தது.
அதில் ஒருத்தர் தான் நடக்க முடியும்.
ஒரு முறை இரண்டு புறமும் இருந்து இரண்டு ஆடுகள் பாலத்தின் மீது நடந்தன.
அப்போது யார் முதலில் பாலத்தில் ஏறிக் கடப்பது என்று கேள்வி வர,
இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சண்டை போட்டன
கடைசியில் கால் தவறி வாய்க்காலுக்குள் விழுந்தன
விழுந்தவுடன் தான் இரண்டுக்கும் புத்தி வந்தது
எப்படியோ கரை ஏறித் தப்பின
அறிவும் பெற்றன.